# 2009 – 2010ம் கல்வி ஆண்டிற்கான பொது மாறுதல் சார்ந்த அறிவுரைகளும், மாறுதல் விண்ணப்ப படிவமும்.

1. ஆசிரியர் பொது மாறுதலுக்கான விண்ணப்பப் படிவம் இரு பிரதிகளில் (மாவட்டம் விட்டு மாவட்டம் எனில் 3 பிரதிகளில்) உதவித் தொடக்கக் கல்வி அலவலகத்திற்கு 15.04.2009 முதல் 24.04.2009 வரை சம்பந்தப்பட்ட உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களிடம் ஒப்படைக்க வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் **A4** அளவுள்ள தாளில் இருக்க வேண்டும்.

2. மாறுதல் விண்ணபம் அளித்த ஆசிரியர்களுக்கு 25.04.2009 மற்றும் 04.05.2009 முதல் 07.05.2009 முடிய அந்தந்த உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் சான்றொப்பம் இட்ட விண்ணப்பப் படிவத்தின் ஒரு நகல் வழங்கப்படும். எனவே மாறுதல் விண்ணப்பம் ஒப்படைத்த ஆசிரியர்கள் அனைவரும் மேற்கண்ட நாட்களில் ஒரு நகலை சம்மந்தப்பட்ட உதவி தொடக்கக் கல்வி அலுவலகம் சென்று பெற்றுக்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறார்கள். இந்த விண்ணபத்தின் அடிப்படையிலேயே ஆசிரியர்கள் கலந்தாய்வுக்கு அனுமதிக்கப்படுவார்கள்.

3. உதவித் தொடக்கக் கல்வி அலவலர்கள் சான்றொப்பமிட்ட விண்ணப்பங்களை மாறுதல் கலந்தாய்வு நடைறெும் நாள் அன்று கொண்டு வரவேண்டும். எக்காரணம் கொண்டும் சான்றொப்பமிட்ட விண்ணப்பமின்றி ஆசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வில் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

4. ஆசிரியர்கள் கலந்தாய்வில் கலந்துகொண்டு, தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளியின் பெயரையும் குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி, கலந்தாய்வின்போது அங்குள்ள அலுவலர்களிடம் சமர்ப்பித்து, உரிய மாறுதல் ஆணையை பெற்றுக்கொள்ளவேண்டும்.

5. * பிற ஒன்றியத்திற்கு அல்லது பிற மாவட்டத்திற்கு மாறுதல் கோரும் ஆசிரியர்கள் விண்ணபத்தில் மாறுதல் கோரும் ஒன்றியம் / மாவட்டத்தின் பெயரை எழுத வேண்டும்.

6. மனமொத்த மாறுதல் கோரும் ஆசிரியர்கள் மாறுதல் விண்ணபத்தின் மேலே தலைப்பிட்டு சிவப்பு மையினால் கோடிட்டு காண்பிக்க வேண்டும். மனமொத்த மாறுதல் கோரும் ஆசிரியர்கள் இதே விண்ணபத்தினை தனித்தனியாக பூர்த்தி செய்து இரண்டு விண்ணப்பங்களும், ஒன்றாக தைத்து கொடுக்க வேண்டும். ஒன்றியத்திற்குள் / மாவட்டத்திற்குள் மனமொத்த மாறுதல் கோரும் விண்ணப்பங்கள் இரண்டு நகல்களும், மாவட்டம் விட்டு மாவட்டம் மனமொத்த மாறுதல் கோரும் ஆசிரியர்கள் 3 நகல்களும் அனுப்ப வேண்டும்.

தொடக்கக் கல்வி இயக்குநருக்காக